RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 177 | ஜூலை.2 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் பணி: அரசு அமைத்த குழுவை அணுக ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூலை.2-

டாஸ்மாக் கடைகளில் காலி மதுபான பாட்டில்களைத் திரும்பப் பெறும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிப்பது தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுக டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் மதுபாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்கள் மீது கூடுதலாக 10 ரூபாய்க்கு விற்க வேண்டும். வாடிக்கையாளர்கள் காலி பாட்டில்களை திரும்பத் தரும் பட்சத்தில் 10 ரூபாயை திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இந்த பணிகளுக்கு தற்போது டாஸ்மாக் கடைகளில் பணியாற்றுவோரை அமர்த்தாமல், தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும். காலி பாட்டில்களை வைக்க தனி இடம், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். டாஸ்மாக்கில் பணியாற்றும் ஊழியர்கள் தற்போது 12 மணி நேரம் வரை பணியாற்ற வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் பணிக்கும் நியமிப்பதால் அவர்களுக்கு பணிச்சுமை ஏற்படும்." என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.



இந்த வழக்கு நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், "காலி மது பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டம் தொடர்பாக ஊழியர்களின் குறைகளை ஆய்வு செய்ய டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சங்கம் அந்த குழுவை அணுகலாம்." என தெரிவித்தார்.

இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, காலி பாட்டில்களை திரும்ப பெரும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுகும்படி மனுதாரர் சங்கத்துக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.



■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் காவலாளி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் உயிரிழந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட குற்றப்பிரிவு காவல் துறையினர் பிரபு ஆனந்தன் கண்ணன் சங்கர மணிகண்டன் ராஜா ஆகியோர் குடும்பத்தினர் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு முன்பு குழந்தைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்

## அஜித்குமார் உயிரிழப்பு விவகாரத்தில் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது

சென்னை: ஜூலை.2-

"திருப்புவனம் கோயில் காவலர் உயிரிழந்த விவகாரத்தில் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுத்துவிட்டோம். கைது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்றுகூட மேலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்." என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் திமுக உறுப்பினர் சேர்க்கைக்கான 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தை அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று (ஜூலை 1) தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "இன்று முதல் 45 நாட்கள் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பு நடைபெறவுள்ளது. நாளை 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற




தலைப்பில் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன. தமிழ்நாடு முழுவதும், ஜூலை 3ம் தேதி முதல், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், திமுகவினர் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்திக்க உள்ளனர்.

தமிழ்நாட்டின் மண், மொழி,மானம் காக்க மக்களை ஒன்றுதிரட்டுவதே இந்த 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தின் நோக்கம். தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதற்காகவே, இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது," என்றார்.

அப்போது மடப்புரம் கோயில் காவலர் உயிரிழப்பு தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "திருப்புவனம் கோயில் காவலர் உயிரிழந்த விவகாரத்தில் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுத்துவிட்டோம். கைது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இன்றுகூட மேலதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம்." என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## அஜித்குமாரின் உடல் முழுவதும் காயங்கள் அதிர்ச்சி தகவல்களும், காவல் துறை அத்துமீறலும்!

சிவகங்கை: ஜூலை.2-


சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரத்தில் போலீஸார் விசாரணையில் உயிரிழந்த கோயில் காவலாளி அஜித்குமாரின் உடல் முழுவதும் காயங்கள் இருந்தன என்பது பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் தெரியவந்தது. காவல் துறையினரின் அத்துமீறல் தொடர்பான வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரேதப் பரிசோதனை குறித்து மதுரை அரசு மருத்துவமனை வட்டாரம் கூறியது: 'அஜித்குமார் பிரேத பரிசோதனை 5 மணி நேரம் நீடித்தது. அது முழுமையாக வீடியோ எடுக்கப்பட்டது. அஜித்குமார் உடலில் வடது கை மூட்டுக்கு மேலே காயம், வலது கை மணிக்கட்டுக்கு கீழே சிராய்ப்பு காயம், வலது பக்க நெற்றியில் சிராய்ப்பு காயம், வலது பக்க கன்னத்தில் சிராய்ப்பு காயம், இடது பக்க காதில் ரத்தம் உறைந்த நிலையிலும் வடிந்த நிலையிலும் உள்ளது.

இடது புஜத்தில் சிராய்ப்பு காயம், இடது பக்க தோள்பட்டை முதல் முழங்கை மூட்டு வரை கன்றிய காயம், இடது பக்க கை மூட்டில் சிராய்ப்பு காயம் நான்கு உள்ளன. இடது கை மணிக்கட்டுக்கு மேல் பகுதியில் மூன்று சிராய்ப்பு காயங்கள், இடது பக்க விலாவில் கன்றிய காயம், இடது கரண்டை காலில் சில சிராய்ப்பு காயம், கை விரல்கள் உட்புறமாக மடங்கி விரைப்பாக காணப்பட்டது.

இடது பக்க முதுகில் விலா பின்புறம் கன்றிய காயம், இடது பக்க இடுப்பில் சிராய்ப்பு காயம், வலது பக்க பின் முதுகில் சிராய்ப்பு காயம், இயற்கை உபாதை கழிந்த நிலையில் இருந்தது. இடது கால், இடது மணிக்கட்டுக்கு மேல் தோல் பிரிந்த காயம், இடது கால் பாதத்துக்கு மேல் சிராய்ப்பு காயம், வலது பக்க காதில் உள்பக்கமாக ரத்தம்





உறைந்த நிலையில் காணப்பட்டது என மொத்தம் 18 இடங்களில் காயங்கள் உள்ளன.

உள்ளுறுப்புகள் மண்டல தடய அறிவியல் ஆய்வகத்துக்கு ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில்தான் மரணத்துக்கான தெளிவான காரணம் தெரியவரும். கண்ணில் ஏதேனும் தூவப்பட்டதாக என்பதை அறிய கண் தசை பகுதிகள் கண் பரிசோதனை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எலும்பு முறிவு ஏற்பட்டதா என்பது குறித்து பரிசோதிக்கப்பட்டு வருகிறோம். முழுமையாக அனைத்து முடிவுகளும் வந்த பின்னர்தான் இறுதி பிரேத பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்படும்' என்று அவர்கள் கூறினர்.

வீடியோவில் அம்பலமான அத்துமீறல்: இதனிடையே, காவலாளி அஜித்குமார் மீது போலீஸார் கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளதும், அவர்கள் அத்துமீறலில் ஈடுபட்டதும் வீடியோ ஒன்றின் மூலம் அம்பலமாகியுள்ளது.

அஜித்குமார் மரணம் குறித்து திருப்புவனம் போலீஸார் பிஎன்எஸ்எஸ் 190 (2) (ஏ) பிரிவின் கீழ் வழக்கு பதிந்து நீதித் துறை விசாரணைக்கு அனுப்பப்பட்டது. தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கரமணிகண்டன், ராஜா, ஆனந்த், ராமச்சந்திரன் ஆகிய 6 பேரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ்ராவத் பணியிடை நீக்கம் செய்தார். மேலும், இச்சம்பவம் குறித்து திருப்புவனம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் வெங்கடேஷ் பிரசாத் விசாரணை நடத்தினார்.

பின்னர், இந்த வழக்கு பிஎன்எஸ் 103 (1) பிரிவின் கீழ் கொலை வழக்காக மாற்றப்பட்டது. தொடர்ந்து, தனிப்படை காவலர்கள் பிரபு, கண்ணன், சங்கரமணிகண்டன், ராஜா, ஆனந்த் ஆகிய 5 பேரையும் கைது செய்தனர். மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் 5 பேரையும் 15 நீதிமன்ற காவலில் வைக்க குற்றவியல் நடுவர் வெங்கடேஷ் பிரசாத் உத்தரவிட்டார். இதையடுத்து அவர்களை மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.

அஜித்குமார் வழக்கு கொலை வழக்காக மாற்றப்பட்டு சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட நிலையில், மானாமதுரை டிஎஸ்பி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்.

இதனிடையே, தனிப்படை போலீஸார் கோயில் மாட்டு தொழுவத்தில் வைத்து அஜித்குமாரை கம்பால் கொலைவெறி தாக்குதல் நடத்தி, அத்துமீறலில் ஈடுபட்ட வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதில் தனிப்படையினர் சுற்றி நின்று கொண்டு கம்பால் அடுத்தடுத்து அஜித்குமாரை தாக்கினர். இந்த வீடியோவை அங்குள்ள ஒருவர் ஜன்னல் வழியாக தனது செல்போனில் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி: அஜித்குமார் உயிரிழப்பு தொடர்பான வழக்கு இன்று (ஜூலை 1) மீண்டும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் எம்.எஸ்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "அரசு மக்களுக்கு வெளிப்படையாக இருக்க வேண்டும். அஜித்குமாரை ஏன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தவில்லை? அவரை விசாரணைக்காக வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்ல யார் அதிகாரம் கொடுத்தது? சிவகங்கை மாவட்ட எஸ்பி உடனடியாக காத்திருப்போர் பட்டியலுக்கு அனுப்பப்பட்டதற்கு என்ன காரணம்?

புலனாய்வு செய்வதற்குதான், காவல்துறை சிசிடிவி பதிவை மறைக்க விரும்புகிறீர்களா? ஏன் வெளி இடங்களுக்கு அழைத்துச் சென்று விசாரிக்கிறீர்கள்? அடிப்பதற்கு காவல் துறை எதற்கு? முழு உண்மையையும் காவல் துறை சொல்ல மறுக்கிறீர்கள்? யார் உத்தரவின் பேரில் சிறப்பு புலனாய்வு குழு விசாரணை செய்தது என டிஜிபி பதிலளிக்க வேண்டும். அஜித்குமாரின் உயிரிழப்புக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். இல்லையெனில் மாவட்ட நீதிபதி தலைமையில் நீதி விசாரணை நடத்த உத்தரவிட நேரிடும்" என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் 8 இடங்களில் வீடுகளுக்கான இயற்கை எரிவாயு விநியோக மையம் அமைக்க மாநகராட்சி அனுமதி

சென்னை: ஜூலை.2-

சென்னையில் 8 இடங்களில் வீடுகளுக்கான இயற்கை எரிவாயு விநியோக மையங்களை, டிட்கோ மூலமாக அமைக்க மாநகராட்சி மன்ற கூட்டத்தில் நேற்று அனுமதி வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி மன்றக்கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் முன்னிலையில், ரிப்பன் மாளிகை அரங்கில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள்: சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து 37 வகையான திட்ட பணிகளை மேற்கொள்ளலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது. அதில் 38 வதாக பல்நோக்கு கட்டிடம் கட்டவும் நிதி செலவிட அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பள்ளியில் தலா ரூ.12 ஆயிரம் ஊதியத்தில் 61 தற்காலிக இடைநிலை ஆசிரியர்களை நியமிக்கவும், ரூ15 ஆயிரம் ஊதியத்தில் 300 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கவும், ரூ.18 ஆயிரம் ஊதியத்தில் 206 தற்காலிக முதுகலை ஆசிரியர்களை நியமிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புயல், அதிகனமழை, வெள்ளப்பெருக்கு போன்ற பேரிடரால் பாதிக்கப்படும் சென்னை மணலி பகுதியில், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.12 கோடியில் நிரந்தர பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையம் அமைக்க அரசின் நிர்வாக அனுமதி பெறவும், மாநகராட்சிப் பள்ளிகளில் தினக்கூலியாக ரூ.753 அளவில், 1,538 தற்காலிக தூய்மைப் பணியாளர்களை நியமிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, துறை ஆவணங்களில் பாதை, வண்டி பாதை, பாட்டை, களம், மயானம், இடுகாடு, கார்ப்பரேஷன், பப்ளிக் ஆகிய வகைப்பாடு கொண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது தமிழக அரசின் நகர இயற்கை எரிவாயு விநியோக கொள்கை 2023ன்படி வீடுகளுக்கு இயற்கை எரிவாயு விநியோகம் மேற்கொள்ள மாநகராட்சி சார்பில் தலா 21 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 8 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த இடங்களில் இயற்கை எரிவாயு விநியோக கட்டமைப்பை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட இயற்கை எரிவாயு விநியோகஸ்தர்கள் ஏற்படுத்த டிட்கோ நிறுவனத்துக்கு மாநகராட்சி அனுமதி வழங்கியுள்ளது. சென்னை எழும்பூரில் உள்ள தமிழ் வளர்ச்சி இயக்கக வளாகத்தில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சார்பில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் சிலை அமைக்கவும், பட்டினப்பாக்கத்தில் உள்ள டிமாண்டி சாலைக்கு 'மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் சாலை' என பெயர் சூட்டவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கீழ்ப்பாக்கம், வாடல்ஸ் சாலையை 'தந்தை பேராயர் எஸ்றா சற்குணம் சாலை' என பெயர் மாற்றம் செய்ய அரசின் ஒப்புதல் எதிர்நோக்கி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது கூட்டத்தில் மொத்தம் 110 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக மன்ற கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ் குமார் பேசியதாவது: தற்போது சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள 10 இடங்களில் மட்டுமே வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இன்னும் பல இடங்களில் வாகன நிறுத்த கட்டணம் வசூலிக்க ஒப்பந்தம் கோரப்படா மல் உள்ளது.

இதனால் மாநகராட்சிக்கு வருமானம் குறைகிறது. விரைவில் இதர இடங்களுக்கும் ஒப்பந்தம் கோர வேண்டும். மெரினா கடற்கரையில் நீலக்கொடி சான்றிதழ் பெறுவதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதேபோல் பெசன்ட் நகர் கடற்கரையிலும் மேற்கொள்ள வேண்டும்.

சென்னை மாநகரத்திலுள்ள வாகன நிறுத்த பிரச்சினையைத் தீர்க்க என்எஸ்சி போஸ் சாலை, அண்ணா நகர், தி.நகர் போன்ற இடங்களில், புதிய பன்னடுக்கு வாகன நிறுத்த மையங்கள் அமைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக, கேள்வி நேரத்தின் போது, அமித் ஷா குறித்து விமர்சித்த ஆ.ராசாவைக் கண்டித்து பாஜக கவுன்சிலர் உமா ஆனந்த்பேச முயன்றபோது, துணை மேயரும், திமுக கவுன்சிலர்களும் எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டதால், உமா ஆனந்த் பேசாமல் அமர்ந்துவிட்டார்.

## ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை: ஜூலை.2-

அறிவிக்கப்பட்டு, அமலுக்கு வந்துள்ள ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "பாஜக மத்திய அரசு அறிவித்த ரயில் கட்டண உயர்வு ஏழை மக்களை, குறிப்பாக அடித்தட்டு மக்களை கடுமையாக பாதிக்கும் என்பதை ஆதாரப்பூர்வமாக எடுத்துக் கூறி, அதனை திரும்பப் பெற வேண்டும் என, எதிர்க்கட்சிகள், ரயில் பயணிகள் சேவை அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரும் வலியுறுத்தி வந்த நிலையில், மத்திய அரசு எந்த வித மாறுதலும் இல்லாமல் இன்று முதல் ஜூலை 1ம் தேதி ரயில் கட்டண உயர்வை அமலாக்கியுள்ளது.

கட்டண உயர்வை, ரூபாய் கணக்கில் கூறாமல் பைசா கணக்கில் கூறியிருப்பது பொதுமக்களை ஏமாற்றும் வஞ்சகமாகும். நாள்தோறும் ஒரு கோடிக்கும் அதிகமானோர் என்ற முறையில், ஆண்டுக்கு 400 கோடி பேர் பயணிக்கும் ரயில் பயணம் எத்தனை கோடி கிலோ மீட்டராக இருக்கும் என்பதை கணக்கிட முடியாமல் மறைக்கும் செயலாகும். இது தவிர முன்பதிவு முறையில் தட்கல், பிரீமியம் தட்கல், அதி விரைவு வண்டி, சிறப்புக் கட்டண சேவை என பல்வேறு வகைகளில் ரயில் பயணிகளிடம் வசூலிக்கப்பட்டு வருகின்றன.

கிலோ மீட்டருக்கு 4 பைசா வரை கட்டண உயர்வு என்பதன் மூலம் பல ஆயிரம் கோடி ரூபாய் கட்டண சுமையை பயணிகள் தலையில் சுமத்தியிருக்கும் மோடியின் மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அறிவிக்கப்பட்டு, அமலாக்கத் தொடங்கியுள்ள ரயில் கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று முத்தரசன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



## முருகேசன் க.ராசா, சேவுகமூர்த்தி, கொ.மூக்கன், மூ.பூபதி, ஆ.சவுந்தரபாண்டி ஆகிய அரசியல் உரிமை மீட்புப் போராளிகளின் 28 ஆம் ஆண்டு நினைவு நாள்



மதுரை, ஜூலை.02-

மதுரை மாவட்டம் மேலவளவில் 1997 ஆம் ஆண்டு அரசியல் உரிமைகளுக்காக உயிர்நீத்த போராளிகள் மாவீரன் மேலவளவு முருகேசன், செல்லத்துரை, முருகேசன் க.ராசா, சேவுகமூர்த்தி, கொ.மூக்கன், மூ.பூபதி, ஆ.சவுந்தரபாண்டி ஆகிய அரசியல் உரிமை மீட்புப் போராளிகளின் 28 ஆம் ஆண்டு நினைவுநாளான இன்று மேலவளவில் விசிக சார்பில் அமைக்கப் பட்டுள்ள விடுதலைக் களத்தில் விசிக கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன மலர் வளையம் வைத்து மலர் தூவி வீரவணக்கம் செலுத் தினர். உடன் சிவகங்கை மாவட்ட விசிக மாவட்ட செயலாளர் பாலையா, மாநில நிர்வாகி வழக்கறிஞர் அய்யனார்,மண்டல துணை செயலாளர் முத்துராசு ,மாவட்ட பொருளாளர் பாஸ்கரன், மாவட்ட செய்தித் தொடர்பாளர் மூ.ஆதி வளவன் மாவட்ட துணைச் செயலாளர் சுடர்மணி, ஒன்றிய செயலாளர்கள் திருப்புவனம் கண்ணன், முனிஸ்வரன், இளை யான்குடி ஜேம்ஸ்வளவன், சதிஷ்குமார் மானாமதுரை கிருஷ்ணமூர்த்தி சிவகங்கை ராமதாசு, கார்த்திக் காளையார் கோவில் விஜயன்

மற்றும் சேட் முகமது வழக்கறிர்கள் வேல்முருகன் பாலமுருகன் திருப்புவனம் நகர செயலாளர் கண்ணன்,திராவிடன்,கீழடி பிரபு,ஏனாதி பிரபு, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் 4வது மண்டலம் 59வது வட்டத்தில் ரூ12.50இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. M.L.A பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் வட்டாட்சியர் ஆர்.ராஜேந்திரன், 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர், மாமன்ற உறுப்பினர்கள் ச.இராஜேஸ்வரி, பி.புகழேந்தி, 59வது வட்ட செயலாளர் கு.வெங்கடேசன் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்டமாநகரபகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## மதுரை மாநகராட்சி சார்பில் ”உணவுத் திருவிழா” நடைபெற உள்ளது

மதுரை, ஜூலை.02-

மதுரை மாநகராட்சியின் சார்பில் உணவுத் திருவிழா தமுக்கம் மைதானம் அறிவுசார் மையம் அருகில் உள்ள மாநகராட்சி வாகன காப்பகத்தில் எதிர்வரும் 04.07.2025 (வெள்ளிக் கிழமை) முதல் 06.07.2025 (ஞாயிற்றுக்கிழமை) வரை ஆகிய மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.

உணவுத் திருவிழாவில் குழந்தைகளுக்கான ஆடை அலங்கார போட்டி, கழிவுகளிலிருந்து கைவினைப்பொருட்கள் தயாரித்தல், கொழு கொழு குழந்தைகள் போட்டி, நெருப்பில்லா சமையல் போட்டி, ஓவியப்போட்டி மற்றும் கோலப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளது.

மேலும் தினந்தோறும் பாரம்பரிய நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளான கொம்புஇசை, பறை இசை, கரகாட்டம், மாடு ஆட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, மரக்கால் ஆட்டம், கிழவன் கிழவி ஆட்டம் மற்றும் நாட்டுப்புறப்பாடல்கள் ஆகிய பாரம்பரிய நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. மூன்றாம் நாளில் உணவு திருவிழாவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெறும் நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

எனவே பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் பாரம்பரிய உணவுத் திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை மாநகராட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## வருகின்ற 02.07.2025 முதல் 31.07.2025ம் தேதி வரை, அனைத்து மாட்டினங்களுக்கும், 7வது சுற்று கால் மற்றும் வாய் காணை (கோமாரி) தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.02-

கோமாரி எனப்படும் கால் மற்றும் வாய் காணை நோயானது வைரஸ் கிருமி தாக்கத்தால் கால்நடைகளுக்கு ஏற்படும் ஓர் கொடிய நோயாகும். நோய் தாக்கிய கால்நடைகளுக்கு அதிக காய்ச்சல், வாய் மற்றும் காலில் புண் ஏற்படுதல், வாயில் உமிழ்நீர் வடிதல், பால் குறைதல் மற்றும் சினைபிடிப்பதில் சிரமம் ஏற்படும்.

சிவகங்கை மாவட் டத்தில், தேசிய கால்நடை நோய் தடுப்புத்திட்டத்தின் (ழிகிஞ்சிறி) கீழ், 7வது சுற்று கால் நோய் மற்றும் வாய் நோய் (கோமாரி) கட்டுப்படுத்தும் திட்டமானது 2,07,600 மாட்டினங்களுக்கு கால் மற்றும் வாய்க் காணை நோய் வராமல் தடுக்கும் பொருட்டு, இலவசமாக தடுப்பூசி முகாம் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பாக வருகின்ற 02.07. 2025 முதல் 31.07.2025ம் தேதி வரை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம பகுதிகளிலும் துறை ரீதியாக வருகை புரிந்து, தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசிப் பணிக் காக 55 கால்நடை மருத்துவ குழுக்கள் அமைக்க ப்பட்டு, தினந் தோறும் ஒரு குழுவானது 150 கால்நடைகள் வீதம் தடுப்பூசி போட பணிக்கப்பட்டுள்ளது. இதில், நான்கு மாத கன்றுகள் முதல் அனைத்து வயதுடைய மாட்டினங் களுக்கும் தடுப்பூசிகள் போடப் படவுள்ளது.

எனவே, மேற்குறிப் பிடப்பட்ட நாட்களில் நடைபெறும் தடுப்பூசி முகாம்களை கால்நடை வளர்ப்போர் கருத்தில் கொண்டு, அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக கோமாரி தடுப்பூசி செலுத்துவதன் மூலம், கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து பாதுகாத்திடலாம். மேலும், விவரங்களுக்கு தங்களது பகுதிக்கு அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுகி தகவல்கள் பெற்று, பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## “தூய்மை பணியாளர்களுக்கான காசநோய் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்”: மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து பார்வையிட்டார்

மதுரை, ஜூலை.02-

மதுரை மாநகராட்சி அருள்தாஸ்புரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கான காசநோய் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (30.06.2025) தொடங்கி வைத்து பார்வை யிட்டார்கள்.



மதுரை மாநகராட்சியின் சார்பில் பொது சுகாதாரத்துறையின் கீழ் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், மக்களை தேடி மருத்துவம் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் உடல்நலனை காக்கும் பொருட்டு காசநோய் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

அதன்படி அருள்தாஸ்புரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் தூய்மை பணியாள ர்களுக்கான காசநோய் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாமினை மேயர், ஆணை யாளர் ஆகியோர் துவக்கி வைத்து பரிசோதனைகள் மேற்கொள்வதை பார்வையிட்டார்கள். இம்மருத்துவமுகாமில் காசநோய் தொடர்பான நோய் தடுப்புக்கு ஸ்கேன், எக்ஸ்ரே உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய மருந்து மாத்திரைகள் வழங்கப் பட்டது. இம்மருத்துவ முகாம் காலை 10 மணி முதல் 4 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் சுமார் 150 பணியாளர்கள் பரிசோதனை மேற்கொண்டு பயன்பெற்றனர். மேலும் ஏற்கனவே காசநோய் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் உறவின ர்களிடம் ஊட்டச்சத்து பெட்டகங்ளை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கி னார்கள்.

இம்முகாமில் துணை மேயர் திரு.தி.நாகராஜன், மண்டலத்தலைவர் திருமதி. சரவணபுவனேஸ்வரி, சுகாதாரக்குழுத் தலைவர் திரு.ஜெயராஜ், நகர்நல அலுவலர் மரு.இந்திரா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், முதன்மை மருத்துவ அலுவலர் மரு.ஸ்ரீகோதை, மாமன்ற உறுப்பினர் திருமதி.மகாலெட்சுமி, மருத்துவர்கள், செவி லியர்கள், மாநகராட்சி அலு வலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## மானாமதுரை டிஎஸ்பி பணியிடைநீக்கம்



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல் துணை கண்காணிப்பாளர் சண்முக சுந்தரத்தை தமிழ்நாடு உள்துறை செயலாளர் நேற்று பணி யிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்..





■ திருப்பூர் மாவட்டம் இரண்டாவது மண்டலம். இதில் சுகாதார ஆய்வாளராக ராஜ் கண்ணன் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க இவர் தனி கவனம் மேற்கொண்டு வருகிறார். இதற்கு உதாரணமாக. திருப்பூர் புதிய பேருந்து நிலையம். முன்பு இருந்த சுகாதாரத்துறை ஆய்வாளர். புதிய பஸ் நிலையம் சீரான பராமரிப்பு இல்லாமல் இருந்தது. இப்போது பணியில் இருக்கும் சுகாதாரத்துறை ஆய்வாளர் ராஜ் கண்ணன் புதிய பேருந்து நிலையம் மற்றும் அவருக்குச் சேர்ந்த வார்டுகளையும் சுத்தமும் சுகாதாரம் ஆக இருக்க தனி கவனம் செலுத்தி வருகிறார். இதற்கு உதாரணமாக புதிய பேருந்து நிலையம். சுத்தமாகவும் சுகாதாரத்துடன் நல்ல பராமரிப்பு செய்து வருகிறார். புதிய பேருந்து நிலையம் வரும் மக்களும் சமூக ஆர்வலர்களும் சுத்தமும் சுகாதாரமும் இருப்பதைக் கண்டு சுகாதார ஆய்வாளர் ராஜ் கண்ணன் பாராட்டுகளை தெரிவித்தனர்.

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது





## அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான அறிமுகப் பயிற்சித் திட்ட துவக்க விழா

சிவகங்கை, ஜூலை.02-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 2025 2026 ஆம் கல்வியாண்டில் முதலாமாண்டு பயிலும் மாணவ மாணவியருக்கான அறிமுகப் பயிற்சி திட்டத்தின் துவக்க விழா கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது. கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் நிலோபர் பேகம் தலைமை வகித்து கல்லூரியின் சிறப்புகள் குறித்தும், மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்தும் எடுத்துக் கூறினார். தாவரவியல் துறைத் தலைவர் முனைவர் கோமளவல்லி வரவேற்புரை ஆற்றினார். காரைக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் பார்த்திபன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்கள் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாணவர்கள் சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவிட்டால் உங்கள் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும் என்றும், ஒழுக்கத்துடன் கூடிய கல்வி அவசியம் என்றும் அறிவுரை கூறினார். கல்லூரியின் அனைத்து துறைத் தலைவர்களும் முதலா மாண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். புவி அமைப்பியல் துறைத் தலைவர் முனைவர் உதயகணேசன் நன்றி கூறினார். வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மார்ட்டின் ஜெயப்பிரகாஷ் பிற்பகல் அமர்வில் மாணவர்களிடையே உரையாற்றினார்.

தமிழ் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பாரதி ராணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் பேராசிரிய ர்களும், முதலாமாண்டு மாணவ மாணவியரும் மற்றும் அவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு

கன்னியாகுமரி, ஜூலை.02-

கன்னியாகுமரி மாவட்ட த்திற்கு தோட்டக்கலை துறையின் கீழ் 2025-26ஆம் ஆண்டு பனை மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.2,15,000/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பனை விதைகள் விநியோகம் இனத்தின் கீழ் இலக்கு 25,000 எண்ணத்திற்கு ரூ.75,000/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளிக்கு (தனி நபர்) அதிக பட்சமாக 50 விதைகளும், பொது இடங்களில் தொண்டு நிறுவனங்கள் / ஊராட்சி மன்றங்கள் மூலம் நடுவதற்கு அதிக பட்சமாக 100 விதைகளும் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

பனங்கன்றுகள் விநியோகம் இனத்தின் கீழ் இலக்கு 400 எண்ணத்திற்கு ரூ.40,000/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளிக்கு (தனி நபர்) அதிக பட்சமாக 15 பனங்கன்றுகளும், பொது இடங்களில் தொண்டு நிறுவனங்கள் / ஊராட்சி மன்றங்கள் மூலம் நடுவதற்கு அதிக பட்சமாக 30 பனங்கன்றுகளும் 100 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

பனை சார்ந்த சிறு தொழில் முனைவோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக, சுகாதாரமான மதிப்புக் கூட்டப்பட்ட பனை பொருட் களைத் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்காக, பனை சார்ந்த சிறு தொழில் முனைவோருக்கு ரூ.1,00,000/ மதிப்பீட்டில், 160 சதுர அடியில் நிரந்தர கட்டமைப்பு ஏற்படுத்திட 2 எண்கள் இலக்கிற்கு 50% மானியமாக ரூ.1,00, 000/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இனத்தில் பயன்பெற விரும்பும் பயனாளி சொந்த நிலத்தில் / குத்தகை நிலத்தில் பனை சாகுபடி அல்லது பனை சார்ந்த தொழில் செய்பவராக இருக்க வேண்டும். பயனாளி, தொடக்க பனை வெல்ல கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். மதிப்புக் கூட்டப்பட்ட பனை பொருட்களைத் தயாரிக்கும் கூடம் ஒன்றிற்கு 50 சதவீதம் பின்னேற்பு மானியமாக ரூ.50,000/ வழங்கப்படும். தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டங்களை பற்றி மேலும் தகவலறிய விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டார தோட்ட க்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி பயன்பெறுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கேட்டுக் கொள்கிறார்கள்.



■ மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இரா.இராஜேந்திரன் அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், இளம்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் யுனைடெட் கிரானைட்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளி கட்டடத்தினை திறந்து வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப.சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி. எம். செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ் ஆர் சிவலிங்கம், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ஆர். ஈஸ்வரன், யுனைடெட் கிரானைட்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.டி.வடிவேலு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் முன்னேற்றம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




■ மதுரை தானப்ப முதலியார் தெருவில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் தெற்கு மாவட்டம், சார்பாக கொள்கை விளக்க அணி பொதுக்கூட்டமும், வர்த்தக அணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் வர்த்தக அணி விஸ்வா சரவணா ஏற்பாட்டில் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் S.R தங்கபாண்டியன் தலைமையில் 200, க்கும் மேற்பட்ட நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்,வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சபரி செல்வம், ரஞ்சித் குமார், கோகுல்நாத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# "மகளிருக்கான விடியல் பயண திட்டம்" கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 33 கோடியே 89 இலட்சம் நபர்கள் பேருந்தில் பயணம் செய்து பயனடைந்துள்ளனர்

மதுரை, ஜூலை.02-

தொழிற்சாலை பெருக்கம், வணிகம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புகளை விரைந்து பெறுவதற்கு போக்குவரத்து சிறப்பாக இருப்பது முக்கியம். அதேபோல பெரும்பாலான பொதுமக்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் போன்ற பொது போக்குவரத்தையே சார்ந்துள்ளனர். இதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, அரசு போக்குவரத்து கழகங்களின் மேம்பாட்டிற்காகவும், கிராமப்புறங்களை முக்கிய சாலைகளுடன் இணைக்கும் இணைப்புச் சாலை மேம்பாட்டிற்காகவும் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் அன்றாட வாழ்கையில் அரசு போக்குவரத்து கழகங்கள் மிக முக்கிய பங்கு வகித்து வருவதை உணர்ந்து போக்குவரத்து துறையை இலாப நோக்கில் அல்லாமல் சேவை நோக்ககோடு செயல்படுத்தி வருகிறார். பொதுமக்களின் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் சாதாரணப் பேருந்து, விரைவுப்பேருந்து மற்றும் குளிர்சாதனப் பேருந்துகள் என பல்வேறு பேருந்து சேவைகளை இயக்கி வருகின்றது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டத்தின் கீழ் மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலுவலகங்கள் நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது. இக்கழகத்தில் உள்ள பணிமனைகளின் எண்ணிக்கை 40. மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,447 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,171. மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 12,621 ஆகும். இக்கழகம் சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது. மேலும், நாளொன்றுக்கு நிர்ணயிக் கப்பட்ட இயக்க தூரம் 9.78 இலட்சம் கிலோ மீட்டர் ஆகும். இதனால், மாதத்திற்கு 293.40 இலட்சம் கிலோமீட்டர் தூரம் இயக்கம் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 10.61 இலட்சம் பயணிகளும், மாதம் ஒன்றுக்கு 318.30 இலட்சம் பயணிகளும் பயன்படும் வகையில் வழித்தட சேவைகள் இப்போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.05.2021 அன்று மகளிருக்காக விடியல் பயணத்திட்டம், நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயண சலுகை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மதுரை கோட்ட இயக்கப் பகுதிகளான மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மகளிர் தினந்தோறும் சுமார் 7.5 இலட்சம் பயனாளர்கள் மற்றும் மதுரை கோட்டம் முழுவதும் இதுவரை 80 கோடி மகளிர் பயனடைந்து வருகிறார்கள். இதன் மூலம் மாதம் ஒன்றிக்கு மகளிருக்கு சுமார் 1,000 ரூபாய் வரை சேமிப்பு ஏற்பட்டு பொருளாதாரம் மேம்படுகிறது. மேலும், 1000 நபர்களுக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் இக்கழகம் பேருந்து சேவையினை தொடர்ந்து செய்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மதுரை மண்டலத்தில் 2021 ஆம் ஆண்டு 5,43,3 2,210 பெண்களும், 23,276 மூன்றாம் பாலினத்தவர்களும், 4,20,253 மாற்றுத்திறனாளிகளும், 41,980 மாற்றுத் திறனாளிகளுக்கு துணையாக வரும் பாதுகாவலர்களும், 2022ஆம் ஆண்டு 8,26,50,243 பெண்களும், 28,878 மூன்றாம் பாலினத்தவர்களும், 6,62, 506 மாற்றுத்திறனாளிகளும், 81,920 மாற்றுத்திறனாளிகளுக்கு துணையாக வரும் பாதுகாவலர்களும், 2023 ஆம் ஆண்டு 9,31,19,126 பெண்களும், 39,386 மூன்றாம் பாலினத்தவர்களும், 7,76,982 மாற்றுத்திறனாளிகளும், 53,840 மாற்றுத்திறனாளிகளுக்கு துணையாக வரும் பாதுகாவலர்களும், 2024 ஆம் ஆண்டு 10,58,69,792 பெண்களும், 40,272 மூன்றாம் பாலினத்தவர்களும், 7,47,170 மாற்றுத்திறனாளிகளும், 55,371 மாற்றுத்திறனாளிகளுக்கு துணையாக வரும் பாதுகாவலர்களும் என மொத்தம் 33,89,10,205 (3389.10 இலட்சம்) நபர்கள் பயனடைந்துள்ளனர்.

மகளிருக்கான விடியல் பயணம் திட்டத்தின்கீழ் பயனடைந்த துவரிமான் ஊராட்சி மேலத்தெருவை சேர்ந்த திருமதி.சுகந்தி அவர்கள் தெரிவித்ததாவது:

நான் துவரிமான் ஊராட்சியில் மேலத் தெருவில் வசித்து வருகிறேன். குடும்ப சூழ்நிலையின் காரணமாக தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். மாத சம்பளத்தில் தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருவதால் தினந்தோறும் பேருந்தில் சென்று வர பணம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தேன். இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்காக விடியல் பயணத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தின் மூலம் நான் கடந்த 4 ஆண்டுகளாக பயணம் செய்து வருகிறேன். தினமும் வேலைக்கு அரசு பேருந்திலேயே போய் வருகிறேன். தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் மகளிருக்கான விடியல் பயண திட்டத்தின் மூலம் எனது மாதாந்திர போக்குவரத்து செலவு மிச்சமாகிறது. இதனால் எனது குழந்தைகளுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுப்பதற்கு வசதியாக உள்ளது. என்னைப்போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் நலனை கருத்திற்கொண்டு இத்திட்டத்தை அறிவித்து செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.




■ இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகராட்சியில் நேற்றுமுன்தினம் (30.06/2025) நடந்த பரமக்குடி நகர்மன்ற கூட்டத்தில் தீர்மான பதிவேட்டில் காட்டுபரமக்குடி பூவைசிய இந்திரகுல தேவேந்திர நகரை. தேவேந்திர காலனி என வன்மத்துடன் குறிப்பிட்ட சேர்மன் சேது.கருணாநிதி மற்றும் நகராட்சி ஆணையாளர், பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு அரசின் காலனி என்ற வார்த்தை நீக்கி நகர் என்று அரசாணை பிறப்பித்தும் சாதிய வன்மத்துடன் செயல்படுவதாக பரமக்குடி சுற்றுவட்டார தேவேந்திரர் குல கூட்டமைப்பின் சார்பாக கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்

present sale for
all over Tamil Nadu

# ஐ.டி.ஐ -களில் நேரடி மாணவர் சேர்க்கை

கன்னியாகுமரி, ஜூலை.02-

2025ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திடவும் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க கடைசி தேதி முடிவடைந்த நிலையில் தற்போது நேரடி சேர்க்கை நடைபெற்று வருகிறது.

விண்ணப்பத்தாரர்கள் தாங்கள் விரும்பும் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரடியாக சென்று விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம். இந்த மையங்களில் நேரடி சேர்க்கை நடைபெற்று வருகிறது.

விண்ணப்பக் கட்டணத் தொகையான ரூ.50ஃஐ விண்ணப்பத்தாரர் டெபிட், கிரெடிட் கார்டுகள், நெட் பேக்கிங், ஜிபே வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.

நேரடி சேர்க்கையில் சேர விரும்புவோர் 8ம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆதார் அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் ஒரு நகல்களுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசுஃதனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நேரில் வருகை தர வேண்டும்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் உதவித் தொகை ரூ.750, கட்டணமில்லா பஸ் பாஸ், இலவச சைக்கிள், பாடப் புத்தகங்கள், வரைபடக்கரு விகள், சீருடை, காலணி, பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அரசு பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயின்ற மாணவஃமாணவியருக்கு தமிழ் புதல்வன்இ புதுமைப் பெண் திட்டங்களில் மாதம் ரூ.1000 உதவித் தொகையாக வழங்கப்படும்.

மாணவர்களுக்கு இலவச உண்டி, உறைவிட வசதியும் உள்ளது. நேரடி சேர்க்கையில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எனவே இந்த அரிய வாய்ப்பினை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், கன்னியாகுமரி அவர்களை நேரிலோ அல்லது 94435 79558 என்ற கைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனாஇ தெரிவித்தார்கள்.

# காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் பணி: அரசு அமைத்த குழுவை அணுக ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஜூலை.02-



டாஸ்மாக் கடைகளில் காலி மதுபான பாட்டில்களைத் திரும்பப் பெறும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிப்பது தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுக டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், டாஸ்மாக் ஊழியர் மாநில சம்மேளனம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் மதுபாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் அமல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்படி, விற்பனை செய்யப்படும் மதுபாட்டில்கள் மீது கூடுதலாக 10 ரூபாய்க்கு விற்க வேண்டும். வாடிக்கையாளர்கள் காலி பாட்டில்களை திரும்பத் தரும் பட்சத்தில் 10 ரூபாயை திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இந்த பணிகளுக்கு தற்போது டாஸ்மாக் கடைகளில் பணியாற்றுவோரை அமர்த்தாமல், தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும். காலி பாட்டில்களை வைக்க தனி இடம், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.டாஸ்மாக்கில் பணியாற்றும் ஊழியர்கள் தற்போது 12 மணி நேரம் வரை பணியாற்ற வேண்டிய சூழல் உள்ளது. இந்நிலையில், காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் பணிக்கும் நியமிப்பதால் அவர்களுக்கு பணிச்சுமை ஏற்படும்." என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், "காலி மது பாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டம் தொடர்பாக ஊழியர்களின் குறைகளை ஆய்வு செய்ய டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சங்கம் அந்த குழுவை அணுகலாம்." என தெரிவித்தார்.

இதனைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, காலி பாட்டில்களை திரும்ப பெறும் பணிக்கு தனியாக ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக அரசு நியமித்துள்ள குழுவை அணுகும்படி மனுதாரர் சங்கத்துக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.



2027 ஆம் ஆண்டு சிலி நாட்டில் சேன்டியாகோ நகரில் நடைபெறும் சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள

# கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத்திறன் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பாராட்டு

கன்னியாகுமரி, ஜூலை.02-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள மாற்றுத்திறன் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

சிறப்பு ஒலிம்பிக் பாரத் நடத்திய தேசிய அளவிலான இறகுப்பந்து மற்றும் கையுந்துபந்து போட்டி குஜராத் மாநிலத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் ஜூன் 15 முதல் 19 வரை நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டின் சார்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 19 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் ஜூனியர் மற்றும் சீனியர் பிரிவுகளில் கலந்துகொண்டனர். இறகுப்பந்து போட்டியில் ஜூனியர் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 1 தங்கம், சீனியர் ஆண்கள் பிரிவில் 1 தங்கம் மற்றும் சீனியர் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 1 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் பதக்கம் மற்றும் ஒருங்கிணைந்த இரட்டையர் பிரிவில் 1 வெள்ளி பதக்கம் வென்றார்கள்.

மேலும் கையுந்துப்பந்து போட்டியில் சீனியர் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தங்கபதக்கம் வென்றனர். மொத்தம் 5 தங்கம், 2 வெள்ளி 1 வெண்கல பதக்கங்கள் பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற அனைவரும் 2027 ஆம் ஆண்டு சிலி நாட்டில் சேன்டியாகோ நகரில் நடை பெறும் சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் இந்திய நாட்டின் சார்பாக கலந்து கொள்ள உள்ளார்கள். பங்கேற்கும் அனைத்து வீரர் வீராங் கனைகளும் போட்டிகளில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள்

இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று நமது நாட்டிற்கும், மாநிலத்திற்கும் மற்றும் நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.தினேஷ் சந்திரன், இளநிலை மரு அலுவலர் திருமதி.பவித்ரா, தொண்டு நிறுவனங்கள், சிறப்பு பள்ளிகள், மாற்றுத்திறன் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



அரசு ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பயின்று 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

## விடுதிகள் அளவில் பாடப்பிரிவுகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கேடயங்களை வழங்கினார்

தேனி, ஜூலை.02-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், 2024-2025 ஆம் கல்வியாண்டில் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் பயின்று விடுதிகள் அளவில் பாடப்பிரிவுகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கேடயங்களை வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கி பயில்வதற்கு ஏதுவாக ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள் செயல்பட்டு வருகிறது. மேலும், பழங்குடியினர் இனத்தை சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகளும் செயல்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்திலுள்ள 9 விடுதிகளில் 474 மாணவர்களும், 399 மாணவியர்களும் என மொத்தம் 873 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். 2024-2025 ஆம் கல்வியாண்டில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் கணிதம் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 3 மாணவியர்களுக்கும், அறிவியல் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 6 மாணவியர்களுக்கும், சமூக அறிவியல் பாடப்பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 5 மாணவியர்களுக்கும் என மொத்தம் 14 மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கேடயங்களை வழங்கி, பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி, மாவட்ட உதவி வன அலுவலர் அரவிந்த், இ.வ.ப., மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் சம்பூர்ணம் மற்றும் விடுதி காப்பாளர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



## பொது மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுமா? மானாமதுரை நகராட்சி?

மானாமதுரை, ஜூலை.02-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பட்டறை தெருவில் கடந்த 3 வாரங்களாக சாக்கடைக்கட்டும் பணி நடைபெற்று வந்த நிலையில், சாக்கடையின் இருபுறமும் மண் நிரப்பும் பணி மற்றும் சாக்கடையில் உள்ளே விழுந்த மண் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிகள் முடிவடையும் முன்னரே சாக்கடையை திறந்து விட முயன்றனர் அங்கு உள்ள கடைக்காரர்களின் எதிர்ப்பை தொடர்ந்து பணிகள் முடிந்த பிறகு திறந்து விடப்படும் என்று மானாமதுரை நகராட்சி இன்ஜினியர் மற்றும் நகராட்சி மேஸ்திரி வாக்குறுதி அளித்தனர். சாக்கடை கட்டும் பணியில் சாலையில் உள்ள மண் சரியாக சுத்தம் செய்யப் படாமல் மண்வாரி விட்டு இருசக்கர வாகனத்தில் சென்ற ஒருவருக்கு விபத்து ஏற்பட்டு கால் முறிந்தது. அங்குள்ளவர்கள் அவரை ஆம்புலன்ஸ் மூலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

சந்தை கூடுமிடம், தாயமங்கலம் செல்லும் பேருந்துகள் மற்றும் அரசு ஆஸ்பத்திரிக்கு செல்லும் ஆம்புலன்ஸ்கள் அடிக்கடி செல்லும் முக்கியமான சாலை என்பதால் மூன்றடி ஆழமுள்ள சாக்கடை மூடப்படாமல் இருந்தால் பல விபத்துக்கள் நேர வழிவகுக்கும் மானாமதுரை நகராட்சி நிர்வாகம் இதை ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அங்குள்ள மக்களின் கோரிக்கையாக உள்ளது..




தாம்பரம் வள்ளுவர் குருகுலம் பள்ளியில்

## பள்ளிக்காரணை பாபா ஸ்மார்ட் ஜீனியஸ் செஸ் அகாடமியின் முதல் செங்கல்பட்டு மாவட்ட அளவிலான செஸ் போட்டிகள் நடைபெற்றது

செங்கல்பட்டு, ஜூலை.02-

செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிக்கரணை பாபா ஸ்மார்ட் ஜீனியஸ் செஸ் அகாடமியின் முதல் செங்கல்பட்டு மாவட்ட அளவிலான செஸ் போட்டிகள் காலை 9 மணிக்கு தொடங்கிய இப்போட்டிகளில் செங்கல்பட்டு மாவட்டத்தை சார்ந்த 240 வீரர்கள் பங்கு பெற்றனர். 7, 11, 13, 16 வயதினருக்கான இப்போட்டிகள் 5 சுற்றுகளாக நடைபெற்று முடிவில் முதல் 10 இடங்களை பிடித்த ஆண்கள் பெண்கள் என ஒவ்வொரு பிரிவுக்கும் என மொத்தம் 80 பேர்களுக்கு மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவில் பாபா ஸ்மார்ட் ஜீனியஸ் அகாடமி தலைவர் கவிதா சரவணன் வெற்றி கோப்பை களை வழங்கினார். போட்டியில் கலந்து கொண்டு விளையாடிய அனைத்து வீரர் களுக்கும் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை பாபா ஸ்மார்ட் ஜீனியஸ் அகாடமி செயலாளர் சரவணன் செய்து இருந்தார்.

"தமிழ்நாடு நாள் விழாவினை" முன்னிட்டு தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில்,

## வருகின்ற 04.07.2025 அன்று மாவட்ட அளவில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகள்

மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.02-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18 ஆம் நாளினையே "தமிழ்நாடு நாள் விழா" இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நாள் விழாவினை கொண்டாடும் வகையில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு, மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் வருகின்ற 04.07.2025 (வெள்ளிக் கிழமை) அன்று சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி அரங்கத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேலும், மாவட்ட அளவிலான கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/மும் என பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. கட்டுரை போட்டிகளுக்கான தலைப்பு களாக 1.ஆட்சிமொழி வரலாற்றில் கீ.இராமலிங்கம் மற்றும் 2.பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையாரின் தமிழ் ஆட்சிச்சொல் பணி ஆகியவை மற்றும் பேச்சுப்போட்டிகளுக்கான தலைப்புகளாக 1. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, 2.அன்னைத் தமிழே ஆட்சிமொழி, 3. தொன்றுதொட்டு தமிழ்நாடு எனும் பெயர், 4. அறிஞர் அண்ணா கண்ட தமிழ்நாடு, 5. ஆட்சிமொழி விளக்கம், 6. தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய நிகழ்வு, 7. ஆட்சிமொழி - சங்க காலம்தொட்டு, 8. இக்காலத்தில் ஆட்சிமொழி ஆகியவை போட்டிகளின் தலைப்புகளாக நடத்தப் படவுள்ளது.

இப்போட்டிகளுக்கான பங்கேற்புப்படிவம், போட்டிகள் குறித்த விரிவான விதிமுறைகள் ஆகியவை முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக அந்தந்த பள்ளிகளுக்கு சுற்றிக்கை வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாணாக்கர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டு, மேற்கண்ட போட்டிகளில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



## பழனியில் பள்ளி மாணவகளின் பரதநாட்டிய சலங்கை பூஜை விழா

பழனி, ஜூலை.02-

பழனியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மீனா கல்சுரல் அகாடமி சார்பில் பரதநாட்டிய சலங்கை பூஜை விழா நடந்தது. கண்பத் கிராண்ட் ஹரிஹரமுத்து தலைமை வகித்தார். சாய்கிருஷ்ண மகளிர் மருத்துவமனை நிர்வாகி சுப்புராஜ், நல்லாசிரியர் திருமலைசாமி, ஓய்வுபெற்ற நீதிபதி அமராவதி, சரஸ்வதி சங்கீத வித்யாலயா நிர்வாகி சரஸ்வதி, பரதநாட்டிய விரிவுரையாளர் உமாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மீனா கல்சுரல் அகாடமி நிர்வாகி ஜெயக்குமார் சண்முகம்பிள்ளை நடன அமைப்பு மற்றும் நட்டுவாங்கம் செய்திருந்தார். மாணவிகள் ஸ்லோகம், புஷ்பாஞ்சலி, நடேச கௌத்தம், முரளீதர கௌத்தம், ஜதிஸ்வரம், சப்த, தேவாரம், திருவெம்பாவை, நூலைப்படி, மங்களம் உள்ளிட்டவைகளுக்கு ராகமாலிக, கம்பீர நாட்டை, ஹம்சத்வணி, ஆரபி, கல்யாணி, ராகமாலிகை, பூர்வி கல்யாணி, அமீர் கல்யாணி, செஞ்சுருட்டி உள்ளிட்ட ராகங்களில் நடனமாடினர். பரதநாட்டியம் ஆடிய மாணவிகளுக்கு நகர முக்கிய பிரமுகர்கள் பாராட்டி வாழ்த்தினர்.




■ சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தில் கோயில் நகை திருடு போனதாக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட மடப்புரம் கோயில் காவலாளி அஜித் குமாரை காவலர்கள் லத்தியால் சராசரிமரியாக தாக்கும் காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது..



## மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் மதுரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்



சிவகங்கை, ஜூலை.02-

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோயில் காவலாளி உயிரிழந்த வழக்கில் மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் சென்னை உயர்நீதிமன்றம் கிளை மதுரை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று கோர்ட்டு உத்தரவு அதன் அடிப்படையில் மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் நேற்று ஆஜராகி உள்ளார்.



■ தேனி யூனியன் ஆபீஸ் அமைந்துள்ள தேனி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தை எம்.எல்.ஏ தங்க தமிழ்ச்செல்வன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.இதில் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தேனி நகரமன்ற தலைவர் ரேணுகா பிரியா பாலமுருகன் மற்றும் திமுக கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர். இதில் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மனுக்களை எம் எல் ஏ பெற்றுக்கொண்டார்.



■ சிவகங்கை மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் அறிவுரையின்படி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், நேரில் பார்வையிட்டு காலாண்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் வட்டாட்சியர் திரு.அ.மேசியாதாஸ் உட்பட பலர் உள்ளனர்.




## கீழக்கோட்டையில் உலக வெண்புள்ளிகள் தினம் கொண்டாடப்பட்டது

காளையார் கோவில், ஜூலை.02-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் உலக வெண்புள்ளிகள் தினம் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். ஆசிரியை வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா முன்னிலை வகித்தனர். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்றார். மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக உலக வெண்புள்ளிகள் தினத்தன்று மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் வெண்புள்ளி விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பது என்று தமிழ்நாடு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி உறுதிமொழி வாசிக்க ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அதன் தொடர்ச்சியாக வெண்புள்ளி ஒரு தொற்று நோய் அல்ல. தொழுநோய்க்கும் வெண்புள்ளிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. இது தோளில் ஏற்படும் நிறமி குறைபாடு ஆகும். இது தோளில் செல்கள் போதுமான மெலனின் நிறமியை உற்பத்தி செய்யாததால் தோலில் தோன்றும் வெண்மையான திட்டுக்களாகும். இக்குறை பாட்டால் பாதிக்கப்பட்டவரை தொடுவதன் மூலம் பெண் புள்ளி பரவாது என்ற அறிவியல் உண்மையை வெண்புள்ளிகள் உள்ளவர்களிடமும் பெற்றோர்களிடமும் உறவினர்களிடம் நண்பர்களிடம் கூற வேண்டும். வெண்புள்ளிகள் விழிப்புணர்வு பெற்ற உலகில் முதல் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வெண்புள்ளிகள் குறித்த பதாகைகளிலுள்ள படங்கள் பார்த்தும் செய்திகளை வாசித்தும் மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பெற்றனர். ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161